## திருவண்ணாமலை மகாதீபத் திருவிழாவிற்கு வருகை தரும்

# பக்தர்களுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

சென்னை, அக். 20-

திருவண்ணாமலை திருக்கார்த்திகை தீபத்திருவிழாவின் முக்கிய நிகழ்வான பரணி தீபம் மற்றும் மகா தீபத்திருவிழா நடைபெற உள்ள டிசம்பர் 13-ஆம் தேதியன்று எதிர்பார்க்கப்படுகின்ற சுமார் 50 லட்சம் பக்தர்களுக்குத் தேவையான குடிநீர், சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.10.2024) திருவண்ணா மலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழாவிற்காக பல்வேறு துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

திருவண்ணாமலை மாநகரில் கார்த்திகை தீபத்திரு விழா டிசம்பர் 1 முதல் 17 ஆம் தேதி வரை, கிட்டத்தட்ட 17 நாட்களுக்கு நடைபெற இருக்கிறது.

டிசம்பர் 10 ஆம் தேதி அன்று, திருத்தேர் ஊர்வலம் நடைபெற இருக்கிறது. அன்றைய தினம் சுமார் 6 லட்சம் பக்தர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே போல, முக்கிய நிகழ்வான பரணி தீபம் மற்றும் மகா தீபத் திருவிழா, வருகின்ற டிசம்பர் 13 ஆம் தேதி நடைபெற இருக்கிறது. அன்றைக்கு மட்டும் சுமார் 40 லிருந்து 50 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையொட்டி, அன்றைய தினம் பக்தர்கள் கூடுகின்ற இடங்களில் முதலமைச்சர் அவர்களின் உத்த ரவின்பேரில் கள ஆய்வு செய்தோம். அதைத்தொடர்ந்து, கார்த்திகை தீபத்தை முன்னிட்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான உயர்நிலை ஆய்வுக்கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தினோம்.

கழக அரசு அமைந்தது முதல் திருவண்ணாமலை மாநகரில் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 30 கோடி ரூபாய்க்கும் மேல் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பக்தர்கள் எந்தவித சிரமத்திற்கும் ஆளாகமல் இருக்க, குடிநீர் வசதி நடைபாதை வசதி, வடிகால் வசதி, சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்றுள்ளன. மேலும், மக்களின் பாதுகாப்புக்காக முக்கிய இடங்களில் சிசிடிவி கேமராக்கள் அதிகமாக பொருத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் கூடுவார்கள் என்பதற்காக முதலுதவி மையங்கள் (FIRST AID CENTRES) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடமாடும் கழிப்பறை வசதிகள் (MOBLIE TOILET) உட்பட 400க்கும் மேற்பட்ட கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

அதுபோல கிரிவலப் பாதையில் பலர் அன்னதானம் வழங்குவார்கள். எனவே, உணவு பாதுகாப்புத்துறை மூலம் உணவின் தரத்தை கண்காணிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் மின் விளக்கு வசதிகள், தற்காலிக பேருந்து நிலையங்கள், போக்குவரத்துத்துறையின் சார்பில் பேருந்து சேவை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 37 கோடி ரூபாய் மதிப்பில், திருவண்ணா மலை திருக்கோயிலுக்கான மாஸ்டர் பிளானை அறிவித்துள்ளார்கள். நிறைய திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கோயிலுக்குள் காத்திருப்பு மண்டபங்கள், வளைவுகள், அன்னதானக் கூடங்கள் சமூக நலக்கூடங்கள் கோயில், குளத்தை தூர்வாரும் பணிகள் என ஏராளமான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

சில பணிகள் தொடங்கிவிட்டன. வரும் 6 மாதங்களுக்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்படும்.

கூடுதலாக 5 கோடி ரூபாய் மதிப்பில் கோபுரங்கள் மற்றும் கோவில் விமானங்களில் நிரந்தர மின்னொளி வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த சூழலில் தான் இன்றைக்கு கார்த்திகை தீபத்தை முன்னிட்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஆய்வு செய்திருக்கிறோம்.

சிறப்புத்திட்டச் செயலாக்கத் துறை சார்பாக ஒரு குழுவை இரண்டு நாட்களுக்கு முன் அனுப்பி, பொதுமக்கள், சமூக ஆர்வலர்களிடம் திருவண்ணாமலையில் தீபத்திருநாளின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கருத்துக்களைப் பெற்றுள்ளோம்.

அந்த கருத்துக்களின் அடிப்படையிலும் நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக, இந்த ஆய்வுக்கூட்டத்தின்போது பல ஆலோசனைகள் மேற்கொண்டோம். இந்தக்கூட்டத்தில் பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகள் மாவட்ட நிர்வாகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட அமைச்சராக இருக்கக்கூடிய எ.வ.வேலு அவர்களும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களும், தீபத்திருநாளை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை கண்காணித்து வருகிறார்கள்.

கார்த்திகை தீபத்திரு நாளில் பக்தர்கள் பாதுகாப்போடும், மகிழ்ச்சியோடும் திருவண்ணாமலைக்கு வந்து செல்லும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் நம்முடைய அரசு எடுத்துள்ளது.

குடிநீருக்காக ஏற்கனவே 8 ஆர்.ஓ பிளாண்ட்கள் அமைக்கப்பட்டு பக்தர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். தற்போது புதிதாக 6 ஆர்.ஓ பிளாண்டுகள் அமைக்கும் பணிகளும் துவங்கப்பட்டுள் ளன. விரைவில் அவை செயல்பாட்டிற்கு வரும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் ஏ.வ. வேலு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற பேரவைத் துணைத்தலை வர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்.தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), அம்பேத்குமார் (வந்தவாசி), ஓ. ஜோதி (செய்யார்), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), மாநகராட்சி மேயர் திருமதி. நிர்மலா வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர். தாரேஸ் அகமது, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை துணை செயலாளர் எம். பிரதாப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர்.இரா.சுகுமார் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# தேனி தெற்கு மாவட்ட தலைவர் நியமனம்!

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

தேனி தெற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவராக நியமிக்கப்பட்ட எஸ்.வி.ஆரோக்கியசாமி அவர்கள், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகிப்பதால், அவரை மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **அ.தங்கத்துரை** (வார்டு 3-33, மெயின் ரோடு, கருநாக்கமுத்தன்பட்டி அஞ்சல், உத்தமபாளையம் தாலுக்கா, தேனி மாவட்டம்) அவர்கள் தேனி தெற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர் பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.10.2024

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்,
தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

---

## கழகப் பேச்சாளரும் நடிகருமான

# போஸ் வெங்கட் தாயார் ராஜாமணி அம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.20-

தலைமைக் கழகப் பேச்சாளரும், இயக்குநரும் நடிகருமான போஸ் வெங்கட் தாயார் திருமதி ராஜாமணி அம்மாள் மறைவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக் கழகப் பேச்சாளரும் - சமூகப் பொறுப்புணர்வுமிக்க இயக்குநரும் - நடிகருமான போஸ் வெங்கட் அவர்களின் தாயார் திருமதி ராஜாமணி அம்மாள் அவர்கள் வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தார் என்று அறிந்து வேதனையடைந்தேன்.

அரவணைத்து ஆளாக்கிய அன்னையை இழந்து நிற்கும் போஸ் வெங்கட் அவர்களுக்கும், அவரது குடும்பத்தார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கும்முடிப்பூண்டி கி. வேணு
### அக்டோபர் 20 (2023)



**சிறுவயதிலேயே கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கிய இவர், கிளைச் செயலாளராகவும் – 1973 முதல் ஒன்றியச் செயலாளராக ஐந்து முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டச் செயலாளராக நான்கு முறையும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.**

**1989, 1996 ஆகிய இரண்டு முறை, கும்மிடிபூண்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிவர்.**

**“கழகம் களம் அமைத்த நேரத்திலெல்லாம், அந்தக் களத்திலே முதல் அணியின் சிப்பாய்களில் ஒருவராக இருந்து தன்னை தீயாகத்தீயிலே புடம்போட்டு எடுத்துக் கொண்டவர் தம்பி வேணு” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**2021ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் “கலைஞர் விருது” வழங்கிச் சிறப்பித்ததோடு, “தமிழ்நாட்டின் வட எல்லையான திருவள்ளூர் மாவட்டத்தில் கழகத்தைக் கட்டிக் காத்த தீரர் அருமைச் சகோதரர் கும்மிடிப்பூண்டி கி.வேணு எத்தகைய இடர் வரினும் எதிர்த்து நிற்கும் அஞ்சாத நெஞ்சுக்குச் சொந்தக்காரர். மிசா சிறைவாசத்தில் என்னோடும், கருப்புக் கொடி போராட்டத்தில் ஈடுபட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடும் சிறையில் வாடியவர் அவர்.” என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# கூவாய் இளங்குயிலே!



ஏட்டைத் திருப்பி, இந்தி
எழமீண்டும் துடிக்கிறது!
சாட்டைஎடுப் பான்தமிழன்!
சண்டிஇந்திக் குதிரை,அதன்
சேட்டை ஒடியும்என்றும்
செங்கோட்டை யின்கனவுக்
கோட்டை இடியும்என்றும்
கூவாய் இளங்குயிலே!

துதிக்கும்உங்கள் இந்தியினைத்
தூக்கி,எங்கள் மொழிப்பற்றை
மிதிக்க நினைப்பீரேல்,
மேலாதிக் கச்சுவடு
பதிக்கத் துடிப்பீரேல்,
படைமறவர் பெருங்கூட்டம்
குதிக்கும் களத்தில்! எனக்
கூவாய் இளங்குயிலே!

வாடிக்கை யான(து)இந்தி
வாலாட்டம்! இனியும்இந்த
வேடிக்கை ஆணவத்தை
வேரோ டறுக்காமல்
நீடிக்க விடலாமா?
நெருப்பெடுத்துப் பதினாறு
கோடிக்கை நீளும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

சொந்தமண்ணில் “நீட்” கொடுத்த
சோகம்இன்னும் தீரவில்லை!
வெந்தபுண்ணில் இந்திஎன்னும்
வேல்பாய்ச்ச முனைவாரேல்,
செந்தமிழர் தாய்மண்ணில்
தெருதோறும் உணர்வலைகள்
கொந்தளிக்கும்! என்றுசொல்லிக்
கூவாய் இளங்குயிலே!

நஞ்சருந்தித் தீக்குளித்து
நந்தமிழைக் காப்பதற்கே
நெஞ்சுயர்த்தி இன்னுயிரை
நீத்தார்தம் நினைவலைகள்
சஞ்சரிக்கும் சுடுகாட்டுச்
சாம்பலில் இருந்(து) அக்னிக்
குஞ்சுகள் கிளம்பும்! எனக்
கூவாய் இளங்குயிலே!

ஐயா,அண் ணா, கலைஞர்
அவர்கள்இல்லை எனும்திமிரா?
தொய்வறியாத் “தளபதி”யின்
சுட்டு விரலசைந்தால்
எய்த நினைக்கும்உங்கள்
“இந்திவெறிக் குறிக்கோளைக்”
கொய்(து)எறிவான் தமிழன்!எனக்
கூவாய் இளங்குயிலே!

கருத்துமொழி! கவிதைமொழி!
காவியங்கள் விளைத்தமொழி!
கிருத்து பிறக்குமுன்பே
கிளைவிரித்துத் தழைத்தமொழி!
திருத்தமிகு தமிழ்மொழிக்கோர்
தீங்குவிளைத் தால்,இந்திக்
குருத்தெலும்பு முறியும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

மறப்போமோ வரலாற்றை?
மாநிலத்தின் உரிமைகளைப்
பறிப்பாரேல் பொறுப்போமோ?
பார்த்துக்கொண் டிருப்போமோ?
வெறுப்பேற்றும் இந்தியினை
விரட்டுதற்கே, அறப்போர்க்குக்
குறிப்பார்ஓர் நாள்!என்று
கூவாய் இளங்குயிலே!

வம்புக்குச் செல்லமாட்டான்!
வலியவந்தால் விடமாட்டான்!
“தம்பியர்” பற்றி, அண்ணா
தான்வரைந்த கடிதம்இது!
தெம்புடைய தாய்மொழியைத்
தீண்டுவரேல், இந்திமொழிக்
கொம்புடைந்து நொறுங்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

பகைவிட்டுப் போகும்எனப்
பண்பாடு காத்துவந்தோம்!
மிகைவிட்டுப் போகாமல்
மென்மேலும் வடபுலத்துப்
புகைவிட்டுப் பரப்புவரேல்,
புலிச்சீற்றத் தமிழ்க்கூட்டம்
குகைவிட்டுப் பாயும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

தண்டுவடம் வளைந்தவர்கள்
தலைகவிழ்ந்தார் உங்களிடம்!
ஒண்டமிழ்த்தாய் மொழிகாக்கும்
“உதயநிதி ஸ்டாலின்” படைத்
தொண்டரடா நாங்கள்! எனத்
தோள்நிமிர்த்திப் புயல்வேகம்
கொண்டெழுந்தார் வீரர்! எனக்
கூவாய் இளங்குயிலே!

குழந்தையுடன் தாய்வருவாள்!
குமுறிஎழு வார்இளைஞர்!
விழுந்துப் படுத்துறங்கும்
வீட்டு முதியவரும்
எழுந்துப் புறப்படுவார்!
எட்டுத் திசைகளும், தீக்
கொழுந்து தெறிக்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

“ பண்டிதரின் வாக்குறுதி”
பறக்கிறதே காற்றில்! அதைக்
கண்டுகொள்ள மறுக்கிறதே
கல்நெஞ்சம்! “தாமரை” யின்
தண்டறுந்து போகும்! எங்கள் .
“தமிழ்க்கோபம்” ஏவுகணைக்
குண்டைவிட வலியதெனக்
கூவாய் இளங்குயிலே!

காட்டாட்சி தொடராமல்
காவிநிறம் படியாமல்
நாட்டாட்சி “இறையாண்மை”
நலியாமல், தில்லியிலே,
பாட்டாட்சி நிலவுதல்போல்
“பன்முகத்தன் மை” போற்றும்
கூட்டாட்சி மிளிர்க! எனக்
கூவாய் இளங்குயிலே!

தொடராதீர் மொழிவெறியை!
தூங்கும்என்று வேங்கையின்கால்
இடறாதீர்! ஆளுநரே!
எரிமலைகள் வெடிக்கின்ற
திடலாகும் தமிழ்நாடு!
“ திராவிடநல் திருநாட்டில்”
கொடியஇந்தி வீழும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**



---



சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் நேற்று (19.10.2024) தமிழ்நாடு அரசின் “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலிய நாட்டில் மூன்று வாரம் சிறப்பு பயிற்சி மேற்கொண்ட அரசு கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த பதினைந்து பேராசிரியர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் திட்ட இயக்குநர் திருமதி. சாந்தி ஆகியோரை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக அலுவலர்கள் மற்றும் “நான் முதல்வன்” திட்ட அலுவலர்கள் வரவேற்றனர்.